**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 6 ✧ இதழ்-4 ✧ நவம்பர் 2023

நிர்வாக ஆசிரியர்
**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு
**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)
**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்**
39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# தீப ஒளித் திருநாள் நல்வாழ்த்துகள்

வணக்கம் தோழர்களே!

**அ**னைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்.

போனஸ் 20% அளித்திட அறிவிப்பு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கட்கும், உரிய நேரத்தில் போனஸ் பட்டுவாடா செய்திட அனுமதியளித்துள்ள மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கட்கும், 8.11.2023ல் போனஸ் அளித்திட்ட மதிப்பிற்குரிய வாரியத் தலைவர் அவர்கட்கும், மனம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வோம். தொழிற்சங்கங்களோடு போனஸ் குறித்து பேசி உத்திரவிட்டு அளித்திருந்தால் கூடுதல் சிறப்பாக அமைந்திருக்கும் என்பதும் நமது கருத்து.

ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கியுள்ளதும், அகவிலைப் படி அளித்திட கோர்ப்புகள் உத்திரவுக்கு தயாராகியிருப்பதும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய வேளையில் Class I & IIல் பணியாற்றுபவர் களுக்கும் போனஸ் வழங்கிய 8.11.2023 அன்றே ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கியமைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1.12.2019 முதல் 16.05.2023 வரை பணியேற்ற தொழிலாளர் களுக்குண்டான 6% ஊதிய உயர்வு வழங்கிட 16.11.2023ல் நடைபெற உள்ள வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படும் என்கிற நம்பிக்கை மிகுந்த பதில் வாரியத்திடமிருந்து கிடைத்திருக்கிறது. இருப்பினும், 1.12.2015 முதல் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட நாள் வரை பணியிலமர்ந்தவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதை பிடித்தம் செய்திட வெளியிடப்பட்ட உத்தரவை நிறுத்தி வைத்திருந்தாலும் ரத்து செய்தால்தான் 1.12.2019 முதல் 16.05.2023 வரை பணியேற்ற தொழிலாளர்களுக்குண்டான 6% ஊதிய உயர்வு அளிக்க முடியும் என்கிற நிலைபாடு வாரியத்தில் இருப்பதாகவும் தெரிய வருகிறது.

விபத்துகள் கணக்கின்றி தினசரி நடப்பதும், தொழிலாளர்கள் காக்கை, குருவி போல கரண்ட் கம்பியில் செத்து தொங்குவதும், கவலைக்குரியதாகவும், கண்டனத்திற்குரியதாகவும் உள்ளது.

பாதுகாப்பு வகுப்புகள் நடத்துவது, சரியான பாதுகாப்பு உபகரணங்கள் அளிப்பது, வேலையில் அவசரப்படுத்தாமல் இருப்பது, அதிகாரிகளின் அச்சுறுத்தலை நிறுத்துவது, பொதுமக்களின் பொறுமையின்மைக்கு எல்லை வகுப்பது, கவனத்தோடு வேலை செய்ய மேற்பார்வைகள் செய்வது, யார் எந்த வேலை செய்ய வேண்டும் என நிர்ணயிப்பது, குறைவான தொழிலாளர்கள் அதிக பணிச்சுமையென காக்கை தலையில் பனம் பழத்தை வைப்பதுபோல பணி செய்ய நிர்பந்திப்பது போன்றவைகளை சரி செய்திடாமல் வாரியம் இப்படியே

செல்வதும் விபத்து நடந்தால் காரணமானவர்களை பணியிடை நீக்கம் செய்வார்கள் என பத்திரிகையில் செய்தி வரவைப்பதும் மட்டும் பொறுப்பான நிர்வாகத்திற்கு அழகல்ல.

ஆபத்து நிறைந்த பணியான மின்துறைக்கு ஆள்பற்றாக்குறைவைத் தீர்க்க வேண்டாமா? ஊர்மாற்றம் உத்தரவு பெற்றவர்களை பணி விடுப்பு செய்திட வேண்டாமா? ஊர்மாற்றம் கேட்டுள்ள கேங்மேன் பணியாளர்களை சொந்த ஊருக்கு அனுப்பிடல் வேண்டுமா? ஊர் மாற்றம் செய்ய மறுப்பார்கள் என்றால் எதற்காக விண்ணப்பிக்க உத்திரவிட்டார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது.


அனைத்து பிரிவுகளிலும் பதவி உயர்வு அளிப்பது தேங்கிக் கிடக்கிறது. குறிப்பாக கணக்கீட்டுப் பிரிவில் வருவாய் மேற்பார்வையாளர், நிர்வாகப் பணியில் உதவி நிர்வாக அலுவலர், நிர்வாக அலுவலர், வரைவாளர் பிரிவில் முதுநிலை வரைவாளரிலிருந்து தலைமை வரைவாளர், Diploma & Non Diploma JE 2nd grade போன்ற பதவி உயர்வுகளை வழங்காமல் பாரபட்சம் காட்டுவது என்பது நிர்வாகத்திற்கு அழகல்ல.

எரிசக்தி துறை செயலாளர் பொறுப்பேற்ற உடன் இரண்டு உத்திரவுகள் வந்துள்ளது. BP No. 2ஐ ரத்து செய்ய வேண்டியுள்ள கோரிக்கையை புறக்கணிக்கும் வகையில் கடந்த 11.07.2023ல் உத்திரவிட்டுள்ளதும், G.O. 100க்கான முத்தரப்பு ஒப்பந்தம் செய்வதற்கான முன்வரைவில் தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்காத நிலையில் கடந்த 31.10.2023ல் முன்வரைவை இறுதி செய்திருப்பதும் அரசு அவசரகதியாக TANGEDCOவை மூன்று கம்பெனிகளாக பிரித்து, பின்னர் Distribution Companyயை பல கூறுகளாக பிரித்து தனியார் மயப்படுத்துதற்கும் ஆயத்தப்படுகிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இதன் தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கு மேல் காலியாக உள்ள பதவிகளை ரத்து செய்யும் பணி துவங்கியிருப்பது மட்டுமல்ல புதிதாக வாரியத்திற்கு RE Power சார்பாக 2 இயக்குநர்கள் சேர்க்கப்பட்டும் Power Finance சார்பாக 1 ஒரு இயக்குநர் சேர்க்கப்படவுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மின்சாரத் தொழிலாளர், தொழிலாளர்களின் நலன்களை புறக்கணிக்கும் செயல் தொடருமன்றாலோ அல்லது தன்னிச்சையாக நடக்குமென்றாலோ முறியடிப்பதற்கு தயங்காதவர்கள் மின்சார வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் என்பதை புரிய வைக்கும் அவசியம் ஏற்பட்டால் புரிய வைப்போம்.

''பொறுத்தார் புவியாள்வார்'' என்ற முதுமொழி உண்டு. பொறுமைக்கு எதுவரை எல்லை என்பதை பொறுத்திருந்து சொல்வோம். வாழ்வில் தீமையை நீக்கி ஒளி வழங்கும் தீபாவளியாகட்டும்!

***- ஆசிரியர்***



# பெடரேஷன் கடிதங்கள்

பெறுநர்: நாள் : 03.11.2023

**தலைவர்,** தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : *2022-2023ம்* ஆண்டுக்கான போனஸ் - பணப்பட்டுவாடா - குறித்து.**

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குட்பட்ட TANGEDCO, TANTRANSCOவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் 20% மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 12.11.2023 அன்று தீபாவளி பண்டிகை உள்ளதால் விரைவாக நடவடிக்கை எடுத்து உடனடியாக போனஸ் தொகையினை வழங்கிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 03.11.2023

**தலைவர்,** தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : கேங்மேன் - பணியாளர்கள் - அடிப்படை ஊதியம் - *03/2023* - மாதத்திற்குரிய ஊதியம் - வழங்கப்படாமல் உள்ளது - தொடர்பாக.**

கேங்மேன் பணியாளர்கள் நேரடி நியமனத்தில் தொகுப்பூதியம் அளிக்கப்பட்டு அடிப்படை சம்பளம் பொருத்தம் செய்து 2023 மார்ச்ல் வழங்கிட வேண்டியதை ஒரு மாதம் தாமதமாக ஏப்ரல் 2023ல் வழங்கியுள்ளதால் பல்வேறு வட்டங்களில் மார்ச் 2023க்குரிய ஊதிய வித்தியாசத்தை வழங்குவதற்கு மேற்பார்வை பொறியாளர்களிடமிருந்து நிதி கேட்டு கடிதங்கள் வந்துள்ளதாக தெரிய வருகிறது.

தலைவர் அவர்கள் தகுந்த உத்திரவிட்டு மின்வட்டங்களிலிருந்து நிதி கேட்டு கடிதம் வந்துள்ள மின்வட்டங்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்கிட தகுந்த உத்திரவிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 03.11.2023

**தலைவர்,** தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : *01.12.2019* முதல் ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தம் - நிலுவைத் தொகை - Class I & IIல் பணியாற்றுபவர்களுக்கு வழங்கிட வேண்டுதல் - தொடர்பாக.**

1.12.2019 முதல் ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தம் 16.05.2023ல் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஊதிய உயர்வுக்கான நிலுவைத் தொகை Class III மற்றும் IVல் பணிபுரியும் TANGEDCO & TANTRANSCO பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

TANGEDCO மற்றும் TANTRANSCOவில் பணியாற்றும் Class I & IIல் பணிபுரியும் அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் மேற்கண்ட நிலுவைத் தொகை வழங்கப்படாமல் உள்ளது.

தலைவர் அவர்கள் Class I & IIல் பணிபுரிபவர்களுக்கு உடனடியாக நிலுவைத் தொகை வழங்கிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 03.11.2023

**தலைவர்,** தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : *01.12.2019 - 16.05.2023* இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்றவர்கள் - ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கிட வேண்டுதல் - தொடர்பாக.**

1.12.2019 - 16.05.2023க்கு இடைப்பட்ட காலத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத் தொகை அளிப்பது தொடர்பாக அனைத்து மேற்பார்வை அலுவலகங்களிலிருந்தும் கணக்கிடப்பட்டு நிதி ஒதுக்கீடு கேட்டு வரப்பட்டுள்ளதை பரிசீலித்து ஓய்வு பெற்றவர்களுக்கு பணிக் காலத்திற்குண்டான ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கிட உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 26.10.2023

**தலைவர்,** தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : களப்பணியாளர்கள் - ஊர் மாறுதல் - உத்திரவு - தொடர்பாக.**

**பார்வை : (Per) CMD TANGEDCO Proceedings No. 102, Dt. 18.10.2023.**

பார்வையில் கண்டுள்ளபடி உத்திரவின்படி தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அவர்களிடமிருந்த ஊர் மாறுதல் அளிக்கும் அதிகாரத்தை மண்டல தலைமைப் பொறியாளர்களுக்கு வழங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக 01.07.2023ல் ஊர் மாறுதல் உத்திரவிட்டதற்கு எதிராக ஆட்சேபித்த எங்களது கருத்துகளை முழுமையாக கவனத்தில் கொள்ளாமல் அவசரத்தில் இடப்பட்ட உத்தரவாக கருத முடிகிறது.

மேற்கண்ட உத்திரவு நடைமுறையில் உள்ள ஊர் மாறுதல் உத்திரவுகளுக்கு எதிராக உள்ளதால் இதுகுறித்து தொழிற்சங்கங்களுடன் பேசி முடிவெடுத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

★★★

நாள் : 26.10.2023

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள்** : **மின்கணக்கீடு - கைப்பேசி வழியாக கணக்கீடு செய்தல் - உத்திரவு - தொடர்பாக.**

**பார்வை** : **Lr. No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/AAO / JA/F.Rev. Aug/D. 770/2023/dt. 13.10.2023.**

பார்வையில் கண்டுள்ளபடி மின்கணக்கீடு செய்ய மின்வட்டத்திற்கு 10 பிரிவுகள் தேர்வு செய்து நடைமுறைப்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட புதிய நடைமுறையை மேற்சொன்ன பணியாளர்களின் பிரத்தியேக உபயோகத்தில் உள்ள தொடுதிரை இணைந்த கைபேசியைப் பயன்படுத்துவது என்பது சொந்த உபயோகத்திற்கு இடையூறு ஏற்படுவது மட்டுமல்ல கையடக்க கைபேசியின் தொடுதிரையில் மின்கணக்கீட்டு பணி பதிவு செய்யும்போது தவறுகள் நடந்திட வாய்ப்புள்ளது. மேலும் இப்புதிய உத்திரவினால் கணக்கிட்டு பணியில் உள்ள தொழிலாளர் தொடுதிரை கைபேசி குறித்த சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, தலைவர் அவர்கள் இம்முறையில் பணி செய்ய நிர்வாகத் தரப்பிலிருந்து Tab போன்ற பெரிய கருவிகளை இணைய வசதியுடன் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம். மேற்கண்ட எங்களது வேண்டுகோளினை பரிசீலிக்கும் வரையில் புதிய நடைமுறையை தற்காலிகமாக நிறுத்தி வைத்திட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## Tamil Nadu Electricity Board Administrative Staff and Officers Association
## Adm.Sup., Adm.O., Sr.Adm.O- ஊதிய வித்தியாசம் சரிசெய்ய வேண்டி வாரியத்திற்கு கடிதம்

To 4.11.2023

**The Chairman Cum - Managing Director**
TANGEDCO, Chennai - 600 002.

Respected Sir,

***Sub :*** Removal of disparity in the scale of pay and Grade Pay of the Personnel in Adm. Cadre Br. on par with the othr two Branch in Adminstration - orders Requesting of

1) Our Association latest Letter dt. 9.10.2023.

Before going to Analyse the disparity the question the present position of Administration in Board brings the kind notice of the Hon'ble Chairman.

**PRESENT POSITION OF ADMINISTRATION IN BOARD**

The TNEB was formed in 1.7.1957. There are Six Branches including 3 Adm. Branches in Administration, Generally any organisation or Board is having only one Acministrative wing. Bt in our Board 3 Adm. Branches are functioning. As the Adm. Cadre Branch is one among the Adm. Wing in TNEB, it is appropriate to compare any disparity in pay scale and Grade pay between the personnel in the Administrative wing only and there is no need to compare with other branches like Account Audit and Technical etc. It is well known fact that in the field of management Adminstration is one of main pillars of the Board and it has to be given due recognisation on par with other Administration functioning in Board.

Lastly in our letter dt. 9.10.2023 all the importance points for the removal of disparityin the scale of pay of the personnel of Three Branches of Administration in question are furnished with a comparity statement of Three Branches. Copy of the Statement is enclosed.

Inspite of repeated our request from 1993 onwards for the removal of the disparity in the scale of pay of the personnel of Staff and Officers of our Administration Cadre branch on par with other two branches does not yield the expected justifiable result upto the year 2020.

A Letter No. 65039/A3/A31/2020-2 dt. 23.10.2020 has been received from the Board for Non Compliance of our justifiable demands are not clear, confusing and contrary to the reasonable demands of our Association. This shows that the Board wants to give step mother treatment to our Administrative Cadre Personnel which is not acceptable under natural grouds of Administration. A copy of the letter is enclosed for reference.

Presuming that our Association is not able to get demand of disparity in our cadre branch easily, it is decided to approach the Hon'ble chairman concerned during their period with a letter explaining our demand and clearing if any doubt, for approval.

Our Adm. Cadre Branch does not come under work load and wage Revision settlement. "Our Association" demand is considered based on the merit and justification and getting order from the Board so far.

i) The Board admitting the equal work and equal cadre in Adm Wing and issuing orders in BP No. (per) 138 dt. 03.09.2020 and omitted to clear the pay disparity and follow equal work equal pay system.

ii) The Popular Judgement of equal pay for the same and similar works delivered by the High Court is applicable to our Category Personnel since the incumbents in the three Branches are discharging the same and identical nature of works.

Now the qualification of any degree for recruitment and only Test for promotion upto Class I Service are the same to the three Branches. The reasons for non compliance on our representation, the Board in the Letter 65039/A3/A&1/2020-2 dt. 23.10.2020 are not clear and contrary on our demand.

1. 176 Post of Asst. Adm. Officer (Class II Service) were sanctioned to 176 Distribution Division offices in instalments by suppressing equal number of the Post of JA. The First instalment of 10 post of AADO was sanctioned by the then Hon'ble Chairman Hari Baskar IAS in 1993 and completed in the Year 2015 as agreed the process.
2. 4 Post of Sr. Adm. Officer (Class I Service) to 4 Thermal Stations was sanctioned by the Then Hon'ble Chairman Honseraj Varma IAS, in the year 2007.
3. 9 Post of Sr. Adm. Officer (Class I Service) for 9 Regional Office and 42 post of Adm. Officer (Class II Service) for 42 circle Offices was sanctioned by the then Hon'ble Chairman Gnanadesigan IAS in the year 2014.

**Disparity in the scale of pay and Grade Pay is not only in the Administrative Personnel Cadre but also other Two branches personnel. The Secretriat and Administrative Branch have succesed in getting of removal of disparity in the scale of pay in Question, leaving our Administrative Cadre Personnel. The detail of the Same is furnished below.**

1. The grade pay and scale of pay of the 'Superintendent' in Class III Service in Adm. Branch are equated with 'Section Officer in (Class II Service) in secretariat Branch by the orders issued in BP (Per) No. 28Dt. 09.06.2010 and reorganised in the wage revision settlement for 1.12.2019.
2. The Board proceeded with only 5 categories in Secretariat Br. and created a new post called Asst. Board Section Officer on par with Adm. Br. and also cadre branch in Class II Service, thus equated as six in all three branches with equal pay.
3. The Scale of pay of the Personnel officer in Adm. Br. (Class II Service) are equated with under Secretary in the Secretariat Branch Class I Service. It is seen from the wage revision settlement 1.12.2015 on par with personnel officer in Adm. Branch.

In such a scenario we would once again requested the CMD to kind enough to arrange for examaning our just, fair and reasonable demand in the light of points furnished supra and pass orders on the following demands by kindly persuing sanction of posts bny the then thrree Hon'ble Chairmans indicated above if necessary.

1. Equating the Grade pay and scale of par of Adm. Supervisor (Class II Service) on par with Superintendent in Adm. Branch and Section officer in Secretariat, placing under Class II Service in the same designation.
2. Equating the Grade pay and Scale of pay of Adm Officer (Class II Service) on par with the personnel Officer in Adm. Br. and under secretary in Secretariat Branch, Placing in Class I Service with the same designtion as seen in the wage revision settlement 1.12.2015 and 1.12.2019.
3. Equating the Grade pay and scale of pay of Senior Adm. Officer (Class I Service) on par with SPO in Adm. Br. and Dy. Secretary in Secretariat Branch with the same designation.

Thanking you

Yours Faithfully

**(C. VELLAIKANNU)**

**General Secretary**

# நெல்லை சீமை செயல்வீரர்கள் கூட்ட அறிக்கை

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இல்லாத இடமே இல்லை என்பதை அறிவிக்கும் வகையில் தமிழகத்தின் தென்கோடி எல்லையில் நடைபெற்ற நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் தொடர்பான வெள்ளை அறிக்கை இது.

மாநில செயலாளர் தோழர் N.D.S. அலெக்சாண்டர், தூத்துக்குடி வட்ட இணைச்செயலாளர் தோழர் N. வில்சன் மற்றும் முக்கடல் சந்திப்பில் கிடைக்கப் பெற்ற முத்தாக வாய்த்த குமரி மின்திட்ட செயலாளர் தோழர் R. சோமசுந்தரம் ஆகிய மூவர் குழுவினராகிய நாங்கள் 10.10.2023 அன்று முதலே தமிழக கேரள எல்லைப் பகுதியாம் களியக்காவிளை பிரிவிலிருந்து எம்ப்ளாயீஸ் பெடரேசனின் புகழ் பரப்பிட பரணி பாடும் பவனியை துவக்கினோம். பரணி பாட புறப்பட்ட எங்களுக்கு முன்னரே எல்லா பிரிவுகளிலும் சென்றடைந்திருந்தார் நமது பொதுச்செயலாளர். ஆம். தொழிலாளர் நலனுக்காக அவர் விடும் மூச்சும், அது தொடர்பான அவரது தமிழ் பேச்சும் எங்களுக்கு முன்னரே அங்கே முகாமிட்டிருந்ததை அறிந்து முகம் மலர பெருமிதம் கொண்டோம். எம்ப்ளாயீஸ் பெடரேசன் என நாங்கள் சொல்ல முற்பட்டவுடனேயே அ. சேக்கிழார் படையா என வினவியபோது செவி வழி தேனாய் தித்தித்தது அந்த விசாரிப்பு. ''சேக்கிழாரேடு சேர்ந்தவருக்கு சென்றமிடமெல்லாம் சிறப்பு'' எனச் சொல்லும் புதுமொழிபோல போலத்தான் கண்டோரனைவரின் கனிவான விசாரிப்பு உணர்த்தியது. மனதில் கர்வம் கொண்டு மகிழ்ந்தோம்.

10.10.2023 பிரயாணத்தில் 20க்கும் மேற்பட்ட பிரிவு அலுவலகங்களுக்கு சென்றோம். பெரும்பாலும் அலுவலக பணியாளர்களையே சந்திக்க நேர்ந்தது. கற்றோர் விகிதம் அதிகமுள்ள மாவட்டம் என்பதை பறைசாற்றும்விதமாக பல்வேறு கேள்விகளை முன்வைத்தனர். விடையளிக்கும்விதமாக எம்ப்ளாயீஸ் பெடரேசன் இதுவரை கண்ட இயக்கங்கள், நடத்திய பேச்சுவார்த்தைகள், அடைந்த வெற்றிகள் போன்றவற்றை விளக்கினோம். 31.08.2023 அன்று வாரியத் தலைவர் உள்ளிட்ட மின்கழக உயர் அலுவலர்களிடம் நடத்திய பேச்சுவார்த்தை குறிப்புகளின் அச்சடித்த சுற்றறிக்கையை வழங்கினோம். எழுப்பிய வினா பலவற்றிற்கு விடை அதில் இருந்ததால் விவாதமின்றி எங்களால் விடைபெற முடிந்தது.

இரண்டாம் கட்ட பிரச்சார பயணமாக 13.10.2023 அன்று தென்கோடி குமரி திட்டத்தின் வடகோடி பிரிவான ஆரல்வாய்மொழி பிரிவிலிருந்து பயணத்தை துவக்கினோம். அன்றும் சுமார் 25க்கும் மேற்பட்ட பிரிவு அலுவலகங்களுக்கு சென்றோம். கேங்மேன் பணியாளர்கள் பலரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களது வாழ்வில் ஒளியேற்றும்விதமாக எம்ப்ளாயீஸ் பெடரேசன் எடுத்த முயற்சிகள். அதன் பலன்கள், இன்னமும் பலன் பெற எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பேசி நம்பிக்கையூட்டினோம். நம்பிய பலருக்கும் நன்றி தெரிவித்து விடைபெற்றோம். உள்ளூர் தோழர்களின் எண்ணிக்கை கன்னியாகுமரி திட்டத்தின் சார்பாக கலந்து கொண்டோர் எண்ணிக்கை குறிப்பிட்டு சொல்லும் அளவில் 20க்கு மேற்பட்ட எண்ணிக்கையாக அமைந்தது. ஆம். வேர் பலாவின் விளைச்சல் வெளியே தெரியாது. விளைந்த பின்வரும் வாசம் அது இருக்கும் இடத்தை நோக்கி வண்டுகளை வரவழைக்கும். அறுவடைக்கு தயார் என்பது அவ்வமயம் தெரிய வரும். அதுபோலத்தான் கன்னயாகுமரி திட்டத்தில் தோழர்கள் விதைத்துள்ள உழைப்பு. அதன் விளைச்சல் தெரியவரும் நாளில் வண்டுகளாக வந்து சேர்வர் பலர் என மண்ணுக்கேற்ற உதாரணத்தால் மனம் மகிழ தேற்றினார் பொதுச்செயலாளர். உழைத்தவர்களின் களைப்பு நீக்கி களிப்பு சேர்த்த வார்த்தைகள் அவை. வாரியத்தின் இன்றைய நிலை,

ஆட்சியாளர்களின் எண்ணங்கள் இவைகளின் ஊடே சிக்கித் தவிக்கும் தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்து வழக்கமான தனது நற்றமிழ் வார்த்தைகளால் நாமணக்க, செவிகுளிர பேசினார் நமது பொதுச்செயலாளர். இறுதியாக ஒற்றை வீரனாக சுற்றி வரம் குமரி திட்டச் செயலாளர் தோழர் R. சோமசுந்தரம் அவர்கள் நன்றியுரை நவில இனிதே நிறைவுற்றது நெல்லை மண்டலச் செயல்வீரர்கள் கூட்டம்.

கூட்டத்தின் ஊடே மரபுசாரா எரிசக்தி வட்டக் கிளையின் செயலாளர் தோழர். அருண்ராஜ அவர்கள் மரண செய்தி அறிந்து, அன்னாரின் ஆன்மா ஈடேற மவுன அஞ்சலி செலுத்தி, அன்னாரின் தொழிற்சங்க பணிக்கு மரியாதை செய்யப்பட்டது.

கூட்ட முடிவில் அனைவருக்கும் அறுசுவை உணவு நற்சுவையோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிற்பகல் 4.00 மணிக்கு பெருமை மிகு நிகழ்வாக நாகர்கோவிலில் நடந்தேறியது குமரி மாவட்டத்தின் முதல் இரட்டை கோபுர செங்கொடியேற்று விழா நிகழ்வு. மாநில தலைவர், பொருளாளர், அமைப்புச் செயலாளர் மற்றும் மாநில, திட்ட, கோட்ட நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் முன்னிலையில் விண்ணதிர எம்ப்ளாயீஸ் பெடரேசனை வாழ்த்தும் முழக்கங்கள் முழங்க, அதையே தனது மங்கள நாதமாகக் கொண்டு, நமது இரட்டை கோபுர செங்கொடியை பெருமிதத்தோடு ஏற்றி வைத்தார் நமது பொதுச்செயலாளர் அவர்கள். தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரசனின் செங்கோடி தமிழகத்தின் கடைகோடியில் பறக்க ஆரம்பித்தது. அது பறக்கிறது. இன்னமும் பறக்கும்.

மொத்தத்தில் எம்ப்ளாயீஸ் பெடரேசனின் உழைப்பை விதைத்த கூட்டமாக, உற்சாகமாக சங்கப் பணியாற்றும் உணர்வை விதைத்த கூட்டமாக, உன்னதமான நம் கொடியை உயர பறக்கவிட்ட கூட்டமாக, உற்சாகம் குறையாத கூட்டமாக நடந்து முடிந்தது நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம்.

**திருநெல்வேலி மண்டல செயல்வீரர்கள் கூட்ட தீர்மானங்கள்**

1. நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டத்தை, கன்னியாகுமரியில் கூட்டுவதற்கு ஆலோசனை வழங்கிய மாநில தலைமைக்கு நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் நன்றி தெரிவிக்கிறது.
2. 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு நிலுவைத் தொகையின் முதல் தவணையை தாமதமின்றி உடனடியாக வழங்கிட மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
3. 10.12.2019க்குப் பின்னர் பணியேற்பு செய்த கேங்மேன் உட்பட அனைத்து பணியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் 6% ஊதிய உயர்வு வழங்கிட மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
4. 01.12.2023 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையினை உரிய காலத்தில் துவக்கிட மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
5. TANGEDCOவை மூன்றாக பிரிக்கும் நடவடிக்கையை கைவிட மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

6. ஒப்பந்தத்திற்கு எதிராக நடைமுறைப்படுத்த முயலும் டெண்டர் முறையை கைவிட மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

7. மின்வாரிய ஆணை எண். 2 வாரிய நிர்வாகம் ஏற்றுக்கொண்டபடி ரத்து செய்திட தமிழக அரசை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

8. ஊதிய ஒப்பந்தத்தில் நிலுவையிலுள்ள அலவன்சுகளுக்காக அமைக்கப்பட்ட குழு தனது பேச்சுவார்த்தையை உடனடியாக துவக்கிட வேண்டுமென நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

9. மின்சார வாரியத்தில் உள்ள 56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலி பணியிடங்களை உடனடியாக நிரப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

10. கேங்மேன் பணியாளர்களின் சொந்த ஊர் செல்லும் ஊர் மாறுதல் விண்ணப்பங்களின் பேரில் ஒத்துக் கொண்டபடி உடனடியாக உத்தரவுகள் பிறப்பித்திட நடவடிக்கை எடுக்கும்படி மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

11. உள்முகத் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர், இளநிலை மின்பொறியாளர் இரண்டாம் நிலை உள்ளிட்ட பதவிகளை நிரப்பிட நடவடிக்கை எடுக்கும்படி மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்ட்ம கேட்டுக் கொள்கிறது.

12. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சத்திய பிரமாணத்திற்கு எதிராக கேங்மேன் பணியாளர்கள் Live Lineல் பணி செய்ய நிர்பந்திப்பதையும், அனுமதிப்பதையும் உடனடியாக நிறுத்திட வேண்டுமென மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

13. மின்னோட்டமுள்ள மின்பாதைகளில் கேங்மேன் பணியாளர்களை பணிபுரிய வைப்பதால் ஏற்படும் விபத்துகளுக்கு பணி ஒதுக்கீடு செய்யும் பிரிவ அலுவலரே பொறுப்பு என்பதை உறுதி செய்திட மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

14. தேர்தல் வாக்குறுதிப்படி புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திட தமிழக அரசை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

15. வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெறுவோர், விருப்ப ஓய்வு பெறுவோர் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய பணிக் கொடைகளை தாமதமின்றி வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

16. நிரந்தரத் தன்மை வாய்ந்த பதவிகளை அவுட்சோர்சிங் முறைக்கு விடுவதை கைவிட வேண்டுமெனவும், Redeployment (மறுபகிர்வு) முறைக்கு செல்வதை தவிர்க்க வேண்டுமெனவும், மின்சார வாரியத்தை நெல்லை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

# ஈரோடு மண்டல செயல் வீரர்கள் கூட்டம்

**மா**நில தலைமை முடிவிற்கிணங்க மண்டல வாரியான செயல்வீரர்கள் கூட்டம் ஏற்கனவே 6 (ஆறு) மண்டலங்களில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டு ஏழாவது மண்டல செயல்வீரர்கள் கூட்டம் ஈரோடு மண்டல கோபி மின் பகிர்மான வட்டக்கிளையின் கோபி செட்டிப்பாளையத்தில் உள்ள ஸ்ரீ அண்ணாமலையார் உணவக கூட்ட அரங்கத்தில் 29.10.2023 அன்று காலை திட்டமிட்டபடி மாநில செயல்தலைவர் அவர்கள் தலைமையில் துவங்கியது.

கூட்டத்தில் மாநில தலைவர், பொதுச்செயலாளர், மாநில பொருளாளர் உட்பட மண்டல கிளை செயலாளர்கள், மேட்டூர் பணிமனை மற்றும் மேட்டூர் அனல் மின்நிலைய கிளை செயலாளர்கள், மாநில பொறுப்பாளர்கள், மகளிர் அணி பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் செயல்வீரர்கள் பங்கேற்றனர்.

கூட்டத் தலைவர் தனது உரையில் மத்திய மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத செயல்பாடுகளோடு, வாரியத்தின் நிலைப்பாடு குறித்தும் பேசினார். மாநிலத் தலைவர் அவர்கள், இஸ்ரேல் பாலஸ்தீன போர் குறித்தும், இந்திய அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலுக்காக தயாராகும் நிலை, மத்திய மாநில அரசுகள் தந்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத தன்மை வாரியத்தின் நிலை, வாரிய உயரதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே நமது அமைப்பை பற்றிய மதிப்பீடு, எதிர்பார்ப்பு, மற்றும் வளர்ச்சி பற்றி பேசியதோடு, நம் முன்னே உள்ள தீர்க்கப்படாத கோரிக்கைகள் தீர்க்கப்பட நாம் தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருக்க வேண்டியதன் அவசியம், நாம் மேலும் வளர வேண்டியதன் அவசியம் குறித்தும் பேசினார்.

பொதுச்செயலாளர் அவர்கள் தனது பேச்சில் அரசு மற்றும் வாரியத்தின் செயல்பாடு, ஊதிய ஒப்பந்தத்தில் நாம் கையொப்பமிடாத தன்மை, ஒப்பந்தத்தின் குறைபாடுகள், வாரிய உத்திரவு 2-ன் பாதிப்புகள் ஏற்றுக்கொண்டபடி அதனை இரத்து செய்ய மறுப்பது, Smart Meter புகுத்துவது, அதனால் வாரியத்தின் சுமைதான் கூடுமே தவிர, வருவாய் கூடாது என விளக்கியதோடு, கணக்கீட்டுப் பணியாளர்களை தங்கள் சொந்த கைப்பேசி மூலம் கணக்கீட்டு பணியினை செய்ய வைப்பது, நிலுவையிலுள்ள அலவன்ஸ்கள், மற்றும் வேலைப்பளு குறித்து பேச்சுவார்த்தை நடத்தாதது, போனஸ் 20% உத்திரவிட்டாலும் அதனை தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசி முடிவெடுக்காதது என பல்வேறு விஷயங்களை பேசியதோடு ஏனைய 6 (ஆறு) மண்டல செயல்வீரர்கள் கூட்டத்திற்கு கோரிக்கைகள் மீது முடிவுகள் எடுக்கப்படாவிட்டால், தேவையான போராட்டங்கள் குறித்து முடிவெடுக்க வேண்டியிருக்கும் என தெரிவித்தார்.

மாநிலப் பொருளாளர் மண்டல செயல்வீரர்கள் கூட்டத்தின் நோக்கம், கிளைகளின் செயல்பாடுகள் குறித்த மதிப்பீடு, சங்கம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார். தொடர்ந்து மாநில, வட்டக்கிளை பொறுப்பாளர்கள் பங்கேற்று பேசினர்.

இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மின்வாரியத்தில் காலியாக உள்ள 56,000 காலிப் பணியிடங்களை நிரப்பிட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தமிழக அரசையும் மின்வாரியத்தையும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
2. கிராமப்புறங்களில் உள்ள நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு குறைவு காரணமாக தங்களது மின் இணைப்பிற்கான மாதாந்திர மின்கட்டணம் செலுத்த கடைசி நாள் தெரிவதில்லை. இதனால் அதிக மின் இணைப்புகள் துண்டிப்புக்கு வருவதாலும் தினமும் DC பணியை பழைய முறைப்படி 15 நாட்களுக்கு ஒருமுறை என மாற்றம் செய்திட வாரியத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
3. ஈரோடு மண்டலத்தில் உள்ள மின் பகிர்மான வட்டங்களில் மின்பாதைகளில் உள்ள உடைந்த மின்கம்பங்களையும், அறுந்துபோன இழுவை கம்பிகளை புதுப்பித்திட களப்பணி செய்ய

கம்பியாளர் மற்றும் களப்பணியாளர் காலிப்பணியிடங்கள் அதிகம் உள்ளதால் வாரியப் பணித்தன்மை அறிந்த ஒப்பந்த பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணிக்கு அமர்த்த மின்வாரியத் தலைமை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4. உள்முகத்தேர்வு மூலம் உதவிப் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல், இயந்திரவியல் மற்றும் கட்டிடவியல்) தேர்வு செய்யப்படாததால் தகுதியுள்ளோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, உடனடியாக உள்முகத்தேர்வு நடத்தி உதவிப் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல், இயந்திரவியல் மற்றும் கட்டிடவில்) ஆகியோரை தேர்வு செய்திட வாரியத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. தேர்வு செய்யப்பட்டு பணிநியமன ஆணை வழங்கப்படாமல் உள்ள 5386 கேங்மேன் பணியாளர்கள் உடன் பணிக்கு அமர்த்த மின்வாரியத்தலைமை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. 01.12.2019க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்கள்கு 6% ஊதிய உயர்வு அளித்திட வேண்டுமென மின்வாரியத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. ஈரோடு மண்டலத்தில் பணிபுரியும் கேங்மேன்கள் வேறு வட்டங்களுக்கு மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளதால் அவர்களுக்கு மாறுதல் உத்தரவு வழங்கிட வேண்டுமெனவும், அவர்கள் கல்வித்தகுதிக்கேற்ற பதவியை உள்முகத்தேர்வு மூலம் வழங்கிடவும், கள உதவியாளராக பணிமாற்றம் செய்திடவும் மின்வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

8. பிரிவு அலுவலகங்களுக்கு பகுதி நேர பணியாளர்களை நியமித்திட வேண்டுமென மின்சார வாரியத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

9. மத்திய அரசின் வற்புறுத்தலுக்கு இணங்க ஸ்மார்ட் மீட்டர் அமுல்படுத்தும் திட்டத்தை தமிழக அரசும் மின்சார வாரியமும் கைவிட வேண்டும் என இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

10. கைப்பேசியில் மின் கணக்கீடு செய்வதற்கு புகுத்தி உள்ள நடைமுறைக்கு எதிராக மாற்று ஏற்பாடு செய்யும் வரை உத்திரவை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மின்வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

11. விருப்ப மாறுதல் உத்திரவு சம்மந்தமாக தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு/சென்னை அவர்களின் வாரிய ஆணை எண். 102/ நாள்: 18.10.2023 உதத்திரவை நிறுத்தி வைத்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

12. நிர்வாகப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் கணக்கீட்டுப் பிரிவு பணியாளர்களுக்கு தாமதமின்றி பதவி உயர்வு வழங்கிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

13. நான்கு மின்பகிர்மான வட்டங்களை உள்ளடக்கிய ஈரோடு மண்டலத்தில் Redeployment என்ற முறையில் ஈரோடு மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பணியாற்றும் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை குறைக்காமல் பழைய நிலையே தொடர மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

14. புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மண்டலத்திற்கு Redeployment என்ற முறையில் ஏற்கனவே மண்டல அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை குறைக்காமல் புதிய மண்டலத்திற்கு புதிய பதவிகள் மூலம் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை நியமித்திட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

15. அனல் மின்நிலையங்களில் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமை விடுமுறை வழங்க உத்தரவை பெற்றுத்தர மாநிலத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

16. மேட்டூர் அனல் மின்நிலைய கிளைக்கு தொழிற்சங்க அலுவலகம் ஒதுக்கீடு செய்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

17. கோபி மற்றும் சேலம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலக வளாகங்களில் உள்ள காலி மனையிடங்களில் தொழிற்சங்க அலுவலகம் அமைத்திட ஒதுக்கீடு செய்து தர வாரியத்தலைமையிடம் உத்தரவு பெற்றுத்தர மாநில தலைமை உதவிட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

18. மேட்டூர் மின்பணிமனை வட்டத்தில் திறன் மிகுந்த இயந்திரங்களும் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களும் உள்ளனர். எனவே, மேட்டூர் மின் பணிமனை வட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்களை வாரியம் கொள்முதல் செய்து மின்தளவாடப் பொருட்கள் உற்பத்தி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

19. மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் இளமின் பொறியாளர்கள்/ இரண்டாம் நிலை மற்ற அலுவலகங்களில் பணிபுரிவதை தவிர்த்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட துணை மின்நிலையங்களில் பணியாற்றிட உத்திரவிடுமாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

20. ஈரோடு மண்டலத்தில் பதவி உயர்வு காரணமாகவும், வேறு வட்டங்களுக்கு மாறுதல் காரணமாகவும் உத்தரவு பெற்று பணிவிடுவிப்பிற்காக காத்திருக்கும் களப்பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்து மன உளைச்சலின்றி, விபத்து ஏற்படாமல் நிம்மதியாக பணி சய்ெய உதவிடும் வகையில் பணிவிடுவிப்பு செய்திட செயற்பொறியயாளர்களுக்கு தகுந்த உத்தருவகளை வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

21. மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட K.R. தோப்பூர் மற்றும் தாரமங்கலம் துணை மின்நிலையங்களில் மின் விளக்கு வசதி மற்றும் தார்சாலை வசதி/கான்கிரீட் சாலை வசதி செய்து தர வேண்நடுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

22. ஈரோடு மண்டலத்திற்குட்பட்ட மின் பகிர்மான வட்டங்களில் அனைத்து களப்பணியாளர்களுக்கும் கோட்ட அளவில் பாதுகாப்பு வகுப்புகள் நடத்திட வேண்டுமாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

23. மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்டிருந்த இ&பே/பள்ளிபாளையம் கோட்டம், தற்போது நாமக்கல் மின்பகிர்மான வட்டத்திற்கு மாற்றப்பட்டுவிட்டதால் இ&பே/ பள்ளிப்பாளையம் கோட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களை பணிவிடுவிப்பு செய்திட இச்।செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

24. ஈரோடு மண்டலத்திற்குட்பட்ட மின் பகிர்மான வட்டங்களில் பணிபுரியும் அனைத்து களப்பணியாளர்களின் முதன்மைப் பட்டியலை வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

25. மேட்டூர் மின் பகிர்மான வட்டம், இ&பே/மேட்டூர் கோட்டத்தில் மறுநியமன உத்தரவு வழங்கப்படாமல் உள்ள பணியாளர்களுக்கு உடனடியாக மறுநியமன உத்தரவு வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

26. மேட்டூர் மின்பகிர்மான வட்டத்திற்குட்பட்ட துணை மின்நிலையங்களுக்கு முறையாக வழங்கப்படும் பெட்டித்தொகை (Imprest) குறித்த நேரத்தில் பெறாத உதவி/ இளமின்பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்கி பெட்டித்தொகை (Imprest) குறித்த நேரத்தில் பெற்று தேவையான செலவுகள் செய்திட தக்க அறிவுரைகள் வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

27. 2022-23ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்குவது குறித்து தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும் என தமிழக அரசுக்கும் மின்சார வாரியத்திற்கும் தெரிவிக்க இச்செயற்குழு கடமைப்பட்டு இருக்கிறது.

28. 01.07.2023 முதல் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கியுள்ள அகவிலைப்படி உயர்வினை மின்வாரியத்திற்கும் உடனடியாக வழங்கிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

# கோவை மண்டல செயல் வீரர்கள் கூட்டம்

தமிழ்நாடு எலெக்ட்ரிசிட்டிபோர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் மாநில செயற்குழுவின் முடிவின்படி, அனைத்து மண்டலங்களிலும் செயல் வீரர்கள் கூட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. கோவை மண்டலத்தில் 28.10.2023 சனிக்கிழமை, நீலகிரி சேரிங்கிராஸ், தேவாங்கள் சமூக சங்க மண்டபத்தில் மாநில துணைத்தலைவர் ஆ. கண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. திருமதி. B. இந்து, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் துவங்கிய கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் கோவை தெற்கு வட்ட கிளை பொருளயாளர் I. லியோபால் வரவேற்று பேசினார்.

கோவை வடக்கு, தெற்கு, மாநகர், உடுமலை, திருப்பூர், பல்லடம், நீலகிரி ஆகிய வினியோக வட்டங்கள், கோவை பொதுக்கட்டுமான வட்டம், NCES/ உடுமலை, குந்தா மற்றும் காடம்பாறை உற்பத்தி வட்டங்களை உள்ளடக்கிய கிளைகளின் கோட்ட நிர்வாகிகளுடன் பிரிவு பிரதிநிதிகள் 300 பேர் கலந்து கொண்டனர்.

கடந்த 2022-ம் ஆண்டில் தமிழ்நாட்டின் அனைத்து வட்டங்களிலும் சிறப்புக் கூட்டங்களை, 33 ஊர்களில் தொடர்ந்து நடத்தி எம்ப்ளாயீஸ் பெடரேசனை வலுவான அமைப்பாக கட்டமைக்க சற்றும் ஓய்வில்லா சூறாவளி சுற்றுப் பயணம் செய்த நமது மாநிலத் தலைவர், பொதுச்செயலாளர், மாநில பொருளயாளரின் பணிகள் அளப்பரியது. ஆற்றிய உரைகளும், அர்ப்பணிப்பான செயல்களும் ஒப்பிட இயலாதது.

இந்திய அரசியலமைப்பின் கீழ் அளிக்கப்பட்டு அடிப்படை உரிமை, உத்திரவாதங்களுக்கு சவால் ஏற்பட்டுள்ள நிலையில், பெற்ற உரிமைகளை பாதுகாக்க வேண்டிய கடமையும், அவசியமும் தொழிற்சங்கத்திற்கு தோன்றியுள்ளது. சந்தைப்படுத்தும் கொள்கை வழியில் மின்சார வாரியம் நாள்தோறும் வெளியிடும் உத்திரவுகள் இதுவரை தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாத்து வந்த மரபுகளுக்கு எதிராக உள்ளதையும், பதவிகளை ஒடுக்குதல், மூன்றாக இருக்கும் மின் நிறுவனத்தை மேலும் பிரிக்க எத்தனிக்கும் செயல்கள் குறித்தும், செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் விளக்கமாக மாநிலத் தலைவரும், பொதுச்செயலாளரும் உரையாற்றினர்.

முன்னதாக திரு. R. சக்திவேல், மாநில துணைத்தலைவர், பொதுப் பணித்துறையில் இருந்து மின்சார வாரியம் தனி வாரியமாக உருவாக்கப்பட்டபோது தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பணிப்பாதுகாப்பு, உரிமைகள், பதவி உயர்வு இல்லை. தொழிற்சங்க முன்னோடிகள் ‘தொழிற்தாவா’ ஏற்படுத்தி கோவை மாவட்ட நீதிபதி ஹரி ஹர ஐயரல் தீர்ப்பை பெற்றனர். இத்தீர்ப்பால் மின்சார வாரியத்தில் முதல் ஒப்பந்தம் ஏற்பட்டது. குந்தா தொழிலாளர்கள் நடத்திய போராட்டம், தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு உள்ளாதை கெத்தை நில்சசரிவால் உயிரிழந்த தியாகிகள் குறித்தும் பேசினார்.

கிளைகளை ஒருங்கிணைத்தும், வரவு செலவுகளை முறையாக வைத்தும், கூட்டம் சீரோடும் சிறப்போடும் நடைபெற மாநில பொருளாளர், திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்களின் ‘முன் ஏர்’ போன்ற உழைப்பும், வழிகாட்டுதலும் காரணமாக இருந்தது.

கணக்குப் பிரிவில் தற்போது ஏற்பட்டுள்ள இடர்பாடுகள், Smart Meter பொருத்தப்பட்டால், கணக்கீட்டுப் பிரிவு பதவிகளின் நிலை குறித்து மாநில இணைச்செயலாளர் D. சாமுவேல் ஜான்சன் பேசினார். ஒவ்வொரு கிளைகளிலும் தீர்க்கப்படும் பிரச்சனைகள், சந்திக்கும் நடைமுறை சிக்கல்கள் குறித்து கிளைச் செயலாளர்கள் பேசினர்.

பொதுச்செயலாளரின் வழிகாட்டல்படி தலைவர்களை உருவாக்கும் பயிற்சிப் பட்டறை போல நடத்தப்படும் மண்டல செயல்வீரர்கள் கூட்டத்தில் அனைத்து மட்ட நிர்வாகிகளும் கருத்துக்கள் கூறி விவாதிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. திட்டமட்ட, கோட்ட மட்ட நிர்வாகிகள், பிரிவு பிரதிநிதிகள் 50 பேர் பேசினர். அனைவரின் கருத்துரைகளுக்குப் பின் 19 தீர்மானங்கள் இயற்றப்பட்டது.

நீலகிரி வட்டக் கிளைக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகளையும், எமரால்டு கிளை புதிதாக துவக்கப்பட்டு அதற்கு நிர்வாகிகளையும் பொதுச்செயலாளர் அறிவித்தார்.

காடம்பாறை, குந்தா கிளைகளின் புதிய நிர்வாகிகளுக்கு கைத்தறியாடை அணிவித்து அறிமுகப்படுத்தப்பட்டது.

திரு. S. உதயகுமார், முகவர் முதல் நிலை சோமனூர் திரு. V. நடராஜன், கருவி காப்பாளர், குந்தா PH5, திருமதி. S. பிரியா, JA, பொள்ளாச்சி வருவாய்ப் பிரிவு ஆகியோர் பொதுச்செயலாளர் முன்னிலையில் எம்ப்ளாயீஸ் பெடரேசனில் இணைந்தனர்.

கோவை மாநகர் வட்டக் கிளை பொருளாளர் G. காமராஜ் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**தீர்மானங்கள்**

1. 01.12.2019 முதல் ஊதிய உயர்வுக்கான முதல் தவணை நிலுவைத் தொகையினை உடனடியாக வழங்க வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

2. 01.07.2023 முதல் தமிழக அரசு வழங்கியுள்ள அகவிலைப்படி உயர்வினை மின்வாரிய அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் உடனடியாக வழங்கிட மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

3. கோவை / தெற்கு வட்டம் சோமனூர் கோட்டம் நீலம்பூர் பிரிவில் 18.10.2023 அன்று மின்துண்டிப்பு செய்த மின்வாரிய பணியாளர்களை தாக்கியவர்கள் மீது FIR போடப்பட்டு இன்று வரை கைது செய்யாமல் உள்ள காவல் துறை உடனடியாக சம்மந்தப்பட்டவர்களை கைது செய்திட வேண்டுமென மண்டல செயற்குழு வற்புறுத்துகிறது.

4. தினசரி DCயை தவிர்த்திட மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

5. 2022-2023ம் ஆண்டிற்கான போனஸ் வழங்குவது குறித்து தமிழக அரசு அறிவித்ததற்கு முன்னர் மின்சார வாரியம் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி இருக்க வேண்டுமென, மின்வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதென இச்செயற்கு தீர்மானிக்கிறது.

6. மின்வாரியத்தில் காலியாக உள்ள 56000 பணியிடங்களை நிரப்பிட தமிழக அரசையும் மின்வாரியத்தையும் கேட்டுக் கொள்கிறது.

7. ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு Time card முறையில் பணியமர்த்திட மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

8. உள்முகத் தேர்வின் மூலம் பதவிகளை நிரப்பிட மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

9. உடல் தகுதி தேர்ச்சி பெற்றுள்ள 5386 கேங்மேன் பணியாளர்களை பணியமர்த்திட மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

10. 01.12.2019ற்கு பின்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஊதிய உயர்வு அளித்திட மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

11. கேங்மேன் பணியாளர்களை சொந்த மாவட்டங்களுக்கு மாறுதல் செய்யவும் கல்வி தகுதிக்கேற்ற உள்முகத் தேர்வு அளிக்கவும், கள பணி உதவியாளர் பதவிக்கு பணிமாற்றம் செய்திடவும் மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

12. பிரிவு அலுவலகங்களுக்கு பகுதி நேர பணியாளர்களை நியமித்திட மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

13. மத்திய அரசின் வற்புறுத்தலுக்கு இணங்க ஸ்மார்ட் மீட்டர் அமுல்படுத்தும் திட்டத்தை தமிழக அரசும் மின்சார வாரியமும் கைவிட வேண்டும்.

14. கைபேசியில் மின் கணக்கீடு செய்வதற்கு புகுத்தி உள்ள நடைமுறைக்கு எதிராக மாற்று ஏற்பாடு செய்யும் வரை உத்திரவை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மின்சாரத்தை கேட்டுக் கொள்கிறோம்.

15. விருப்பமாறுதல் உத்திரவு சம்மந்தமாக தலைமைப் பொறியாளர் பணியமைப்பு சென்னை அவர்களின் வாரிய ஆணை எண். 102, 18.10.2023 நாளிட்ட உத்திரவை நிறுத்தி வைத்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண மின்வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

16. நிர்வாக பிரிவு, கணக்கீடு பிரிவு, கணக்கு பிரிவு பணியாளர்களுக்கு தாமதமின்றி பதவி உயர்வு வழங்கிட மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

17. ஏழுமின் பகிர்மான வட்டங்களை உள்ளடக்கிய கோவை மண்டலத்தில் Redeployment என்ற முறையில் கோவை மண்டல தலைமை பொறியாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்களை குறைக்காமல் பழை நிலையே தொடர இந்த செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

18. புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மண்டலத்திற்கு Redeployment என்ற முறையில் ஏற்கனவே உள்ள மண்டல அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை குறைக்காமல் புதிய மண்டலத்திற்கு புதியதாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை நியமிக்கப்பட வேண்டும் என்று வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

19. குந்தா நீர் மின் உற்பத்தி வட்டத்திற்கு உட்பட்ட அவிலாஞ்சி மின்நிலையம் 5-திலிருந்து பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பேருந்து வசதியும், நோயாளர் ஊர்தி (Ambulance) வசதியும் செய்து தர வேண்டுமென மின்வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

# மதுரை மண்டல செயல் வீரர்கள் கூட்டம்

**வீ**ரமும் பாசமும் விருந்தோம்பலும் நிறைந்த சிவகங்கை சீமையில; TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மதுரை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று திரு. R. மூக்கையா மாநில செயலாளர் மற்றும் தேனி திட்ட செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த மாநில தலைமைக்கு மதுரை மண்டல சார்பில் பூங்கொத்து கொடுத்து வரவேற்கப்பட்டது.

சிவகங்கை திட்ட செயலாளர் KRK சுப்பிரமணியன் அவர்கள் இறை வணக்க பாடலோடு மதுரை மண்டல செயல் வீரர்கள் கூட்டத்தை தொடங்கி வைத்து துவக்க உரை ஆற்றினார்.

மாநில மகளிர் அணி இணைசெயலாளர் திருமதி. N. கலைச்செல்வி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மூத்த தொழிற்சங்க தலைவரும் மாநில துணைத் தலைவரும், சிவகங்கை மின்திட்ட செயல் தலைவருமான திரு. I. அய்யாத்துரை (Rtd Asst Adm officer) அவர்களின் மறைவிற்கும், திரு. அருண்ராஜ் செயலாளர் மரபுசாரா எரிசக்தி திருநெல்வேலி அவர்களின் மறைவிற்கும் மின்விபத்தில் மரணமடைந்த கேங்மேன் தொழிலாளர்களுக்கும் மௌன அஞ்சலி மற்றும் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

மதுரை, மதுரை மெட்ரோ மதுரை GCC, இராமநாதபுரம், தேனி மற்றும் சிவகங்கை மின் பகிர்மான வட்டக் கிளைகளின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் திட்ட, கோட்டமட்ட நிர்வாகிகள் தங்களது கருத்துக்களை தெளிவாக எடுத்துரைத்தனர். மதுரை மண்டல செயலாளர், மாநில பொருளாளர், மாநில உபதலைவர், மாநில செயலாளர், திரு. R. மூக்கையா அவர்கள் மற்றும் அமைப்பு செயலாளர் அவர்கள் மதுரை மண்டலத்தில் உள்ள கிளைகளின் செயல்பாடுகள் குறித்து பேசினார்கள்.

சிவகங்கை கிளையில் மாற்று சங்கத்திலிருந்து பிரிந்து நமது சங்கத்தில் இணைந்த தொழிலாளர்களுக்கு பொதுச்செயலாளர் அவர்களால் சால்வை அணிவிக்கப்பட்டது. இணைந்த தோழர்கள் மாநில தலைமைக்கும் திட்ட நிர்வாகிகளுக்கும் சால்வை அணிவித்து சிறப்பித்தனர்.

இந்திய அளவில் தடகள போட்டியில் - Trible Jumbing-ல் முதலிடமும் .Realy ஓட்டத்தில் இரண்டாம் இடமும், தொடர் ஓட்டத்தில் மூன்றாம் இடமும் பெற்ற நமது உறுப்பினர் மகேஸ்வரன் / Rural சிவகங்கை அவர்களை பாராட்டி பொதுச்செயலாளர் அவர்களால் சால்வை அணிவித்து வாழ்த்தப்பட்டது.

மாநிலத் தலைவர் அவர்கள் நமது அமைப்பின் பெருமிதம் குறித்தும் கடந்த கால போராட்ம் நாம் பெற்ற சலுகைகள் குறித்தும் சிறப்பாக உரையாற்றினார்கள்.

இறுதியாக மாநில பொதுச்செயலாளர் அவர்கள் மின்சார வாரியத்தில் இன்றைய நிலை, நமது கோரிக்கைகள் குறித்து வாரிய தலைவரோடு நடந்த பேச்சுவார்த்தை, கேங்மேன் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து மின்சார தொழிலாளர்கள் பொறியாளர்களின் கடுமையான வேலைப்பளு, மன அழுத்தம் அதன் காரணமாக கேங்மேன் பணியாளர்களின் தொடர் மின்விபத்து குறித்தும், 56 ஆயிரம் காலிப் பணியிடங்கள் உள்ள நிலையில் வாரியம் தேர்வு செய்த 5000 கேங்மேன்

பணியாளர்களையும் ஒப்பந்த பணியாளர்களையும் மற்றும் 10,000 ITI படித்தவர்களை பணிக்கு எடுக்க வேண்டும் எனக் கூறினார்கள்.

IA to RS பதவி உயர்வு JE II Grade பதவி உயர்வு வழங்க வேண்டும். Smart Meter மாட்டுவதால் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பறிபோகும் நிலை குறித்தும் பேசினார்கள்.

மாலை 3.00 மணிக்கு சிவகங்கை திட்ட உபதலைவர் திரு. காஜா அவர்கள் நன்றி உரை நல்க கூட்டம் நிறைவுற்றது. அனைவருக்கும் அன்புடன் மதிய உணவு வழங்கப்பட்டது.

மாலை 5.00 மணிக்கு உலக நாகரிகத்தின் அடையாளமாக இருக்கக்கூடிய கீழடிமண்ணில், திருப்புவனம் உபகோட்டத்தில் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இரட்டை கோபுர செங்கொடி பொதுச்செயலாளர் அவர்களால் ஏற்றப்பட்டது. மாநிலத் தலைவர் அவர்களால் கல்வெட்டு திறக்கப்பட்டது. நமது அமைப்பின் வாழ்த்துக்கள் விண்ணை எட்டும் அளவுக்கு கோஷமிடப்பட்டது.

**தொடரட்டும் வெற்றி பயணம் பறக்கட்டும் செங்கொடி.**

# அகவிலைப்படி 4% உயர்வு - அரசாணை

**©**
**Government of Tamil Nadu**
**2023**

**Manuscript Series**

**FINANCE (Allowances) DEPARTMENT**

**G.O. (Ms) No. 310, Dated : 27th October, 2023**
(Sobakiruthu, Aippasi-10, Thiruvalluvar Aandu 2054)

**ABSTRACT**

**ALLOWANCES** - Dearness Allowance - Enhanced Rate of Dearness Allowance from 1st July 2023 - Orders - Issued.

---

**Read the following:**

G.O. (Ms) N. 142, Finance (Allowances) Department, dated : 17.05.2023.

*****

**ORDER:**

In the Government Order read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to State Government employees as detailed below:-

| Date from which payable | Rate of Dearness Allowance (per month) |
|---|---|
| (1) | (2) |
| 01.04.2023 | 42 per cent of Basic Pay |

2. Hon'ble Chief Minister has made an announcement that Dearness Allowance payable to State Government employees shall be enhanced from 42% of basic pay to 46% of basic pay with effect from 01.07.2023. Accordingly, Government sanction the revised rate of Dearnss Allowance by enhancing 4% as indicated below:-

| **Date from which payable** | **Rate of Dearness Allowance** (per month) |
|---|---|
| (1) | (2) |
| 01.07.2023 | 46 per cent of Basic Pay |

3. The arrears of Dearness Allowance for the months of July, August, September and October 2023 shall be drawn an disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS). While working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

4. The Government also direct that the revised Dearness Allowance sanctioned above shall be admissible to full time employess who are at present getting Dearness Allowance and to employees paid from condingencies at fixed monthly rates. The revised rates of Dearness Allowance sanctioned in this order shall not be admissible to part time employees.

5. The revised Dearness Allowance sanctioned in this order shall also apply to the teaching and non-teaching staff working in aided educational instituions, employees under local bodies, employees governed by the University Grants Commission/All India Council for Technical Education scales of pay, Teachers/Physical Education Directors/Librarians in Government and Aided Polytechnics and Special Diploma Institutions, Village Assistants in Revenue Department, Noon Meal Organisers, Child Welfare Organisers, Anganwadi Workers, Cooks, Helpers, Panchayat Secretaries/Clerks in Vilage Panchayat under Rural Development and Panchayat Raj Department and other employees drawing pay in the prescribed Level of Pay/Special Time Scale of Pay in the Pay Matrix.

6. The expenditure shall be debited to the detailed head of account "303 Dearness Allowance" under the relevant minor, sub-major and major heads of account.

7. The Commissioner of Treasuries and Accounts, Chennai is requested to issue necessary instructions to all Drawing and Disburging Officers while presenting the arrear bill on the revised rates of Dearness Allowance sanctioned at para 2 above.

8. The Treasury Officers / Pay and Accounts Officers are requested to make payment of the revised Dearness Allowance when bills are presented if it is found to be in order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T. UDHAYACHANDRAN**
Principal Secretary to Government

## நான்மணிக்கடிகை பாடல். 17 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### இன்னாமை வேண்டின் இரவெழுக!

**இன்னாமை வேண்டின் இரவெழுக; இந்நிலத்து**
**மன்னுதல் வேண்டின் இசைநடுக; - தனனோடு**
**செல்வது வேண்டின் அறஞ்செய்க; வெல்வது**
**வேண்டின் வெகுளி விடல்.**

**கருத்துரை:**

இழிவானவன் என்னும் பெயரைத் தேடிக் கொள்ள எவனொருவன் விரும்புகிறானோ அவன் தன்னிடம் போதுமான செல்வம் இருந்தும் கூட பேராசை மீக்கூரப் பிச்சை எடுக்கும் தொழிலை மேற்கொள்ளலாம்!

இந்த உலகத்தில் என்றென்றும் நிலைபெற்று விளங்குதலை எவன் ஒருவன் விரும்புகிறானோ, அவன் புகழ் விளைக்கும் செயல்களை மேற்கொள்ளலாம்!

தான் செல்லுமிடமெல்லாம் தனக்குத் துணையாக ஒரு பாதுகாப்புக் கவசம் தேவை என்று எவனொருவன் விரும்புகிறானோ, அவன் அறச்செயல்களில் ஈடுபடுவதை மேறகொள்ளலாம்!

அதுபோல், பிறரை வெற்றி கொண்டு தன்பால் ஈர்த்துக் கொள்ள எவனொருவன் விரும்புகிறானோ, அவன் சினம் (கோபம்) கொள்வதை முற்றிலுமாக விட்டுவிடல் வேண்டும்!

**அருஞ்சொற்பொருள்:**

இன்னாமை வேண்டின் = இழிவை ஒருவன் விரும்பினால்; இரவு எழுக = இரந்து (பிச்சை எடுத்து) உண்பதை மேற்கொள்க; இந்நிலத்து = இவ்வுலகில்; மன்னுதல் வேண்டின் = நிலையான பெயர் பெற்று விளங்க விரும்பினால்; இசை நடுக = புகழ் தரும் செயல்களில் ஈடுபடுக; தன்னோடு செல்வது வேண்டின் = தன்னுடன் துணையாகச் செல்வதொன்றை விரும்பினால்; அறம் செய்க = அறச்செயல்களை மேற்கொள்க; வெல்வது வேண்டின் = பிறரை வெல்ல விரும்பினால்; வெகுளி விடல் = சினம் (கோபம்) கொள்வதை விட்டுவிடுக.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 ✆: 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# போனஸ் 20% (8.33+11.67) - வாரிய உத்திரவு

**(ABSTRACT)**

TANGEDCO - Bonus and Ex-gratia to Workmen of TANGEDCO / TANTRANSCO for the year 2022-2023 - Orders - Issued.

---

**(Secretariat Branch)**

**(Per) FB TANGEDCO Proceeding No. 28.** **Dated 06th November 2023**

Sobakiruthu Varudam,
Thiruvalluavar Aandu-2054.

**Read:**

1) (Per.) FB TANGEDCO Proceedings No. 13 (SB), dated : 24.05.2023
2) G.O. Ms. No. 313, Finance (BPE) Department, dated : 27.10.2023.

*****

**PROCEEDINGS:**

In the Government Order second read above, the Government have accorded sanction for payment of Bonus and Ex-gratia to the employees of the State Public Sector Undertakings.

2. In pursuance of the above Government Order, it is hereby ordered that the Workmen of the TANGEDCO/ TANTRANSCO covered by the Wage Settlement (Class III and IV), be paid a Bonus calculated at the rate of 8.33% of the salary (or) wage earned by them during the financial year 2022-2023, subject to and in accordance with the provisions of the Payment of Bonus Act, 1965 and as amended under the revised Bonus Act, 2015.

3. The workmen of the TANGEDCO/TANTRANSCO (monthly paid and full-time workmen), Field Assistant (Trainees), Office Helper (Trainees), Assessors (Trainees), Gangman appointed with time scale of pay, Gangman (Trainees) on consolidated wages and also the workmen of the State Government, Central Government and other organisations, who had worked with Board on deputation during the financial year 2022-2023 drawing a salary (or) wage, including those drawing pay exceeding Rs. 21,000/- per month, will be eligible for the Bonus sanctioned in para-2 above.

4. The Part-time Sweepers an Sanitary workers who are getting the time scale of pay during the financial year 2022-2023, drawing the salary (or) wage, are also eligible for the Bonus sanctioned in para-2 above.

5. It is also ordered that the workmen of the Board covered by the Wage Settlement (Class III and IV) and the deputationists, entitled to get Bonus with reference to the orders in para 2, 3 and above, shall also be paid an Ex-gratia at the rate of 11.67% of the salary (or) wage earned by the, during the financial year 2022-2023.

6. Further, where the salary (or) wage of a workmen entitled to Bonus exceeeds Rs. 7,000/- (Rupees Seven Thousand only) per mensem, the Bonus payable to such workman shall be calculated as if his salary (o) wage

is Rs. 7,000/- (Rupees Seven Thousand only). The maximum Bonus amount payable shall be Rs. 6,997/- (Rupees Six Thousand Nine Hundred and Ninety Seven only).

7. Salary (or) wage for the purpose of payment of Bonus will include the following:-

(a) Basic Pay-Leave Salary;
(b) Dearness Pay;
(c) All classes of special pay (including Short hand and Typewriting Special Pay);
(d) Personal Pay;
(e) Additional Pay for additional charge;
(f) Additional days wage paid for work on National Holidays and Festival Holidays;
(g) Dearness Allowance;
(h) Personal Compensatory Allowance given for protecting loss of pay; and
(i) Deputation Allowance.

The term 'Salary' or 'Wage' will not include Interium Relief, over-time pay and allowances and any pay and allowance other than those mentioned from (a) to (i) above, Salary (or) Wage for the leave surrendered by an employee during 2022-2023 should not be taken into account for computation of Bonus.

8. All the workmen, who had worked in the establishment for not less than thirty working days in the financial year 2022-2023, are entitled to the payment of Bonus.

9. The Ex-gratia amount payable shall be Rs. 9,803/- (Rupees Nine Thousand Eight Hundred and Three only). This Ex-gratia will be reduced on actual basis if a workman had not worked on all the working days in the financial year 2022-2023 as per the provisions of Section 13 of the Payment of Bonus Act, 1965 and as amended in Revised Bonus Act, 2015.

10. The Bonus and Ex-gratia payable to Workman shall also be calculated, as if his/her salary (or) wage is Rs. 7,000/- (Rupees Seven Thousand only) permensem. Under this method, the Bonus and Ex-gratia amount payable shall be Rs. 6,997-/ and Rs. 9,803/- respectively. The Bonus and Ex-gratia payable to a Workman shall not exceed Rs, 16,800/- (Rupees Sixteen Thousand and Eight Hundred only) for the full year.

11.The TANGEDCO also directs that the workman, who is now under suspension, but was on duty during the financial year 2022-2023, also be paid Bonus for the yer 2022-2023 subject to the conditions mentioned above.

12. If, during any part of the financial year 2022-2023, a workman coveredy by the Wage Settlement was promoted to officer category, he/she shall also be paid the Bonus in a proportionate manner for the period he/ she had worked in the workman category.

13. The workman covered by the Wage Settlement, who had worked in the financial year 2022-2023 fully (or) partly, but had retired (or) died subsequently shall be paid the Bonus fully (or) prportionately, as the case may be to the legal heir of the deceased.

14. The expenditure on the payment of Bonus shall be debitable to the following head of account: "TANGEDCO Funds - Revenue Expenses - Account No. 75.501" and the expenditure on the payment of Ex-gratia shall be debitable to "Account No. 75.502."

15. The TANGEDCO also directs that the Bonus payment for the year 2022-2023 payable during 2023-2024 should be disbursed immediately by cashless mode of Electronic Clearance Syste (ECS) to all the eligible employees of TANGEDCO/TANTRANSCO on 08.11.2023.

**(BY ORDER OF THE BOARD)**

**R. DEVARAJ**, Secretary



# அத்தியாயம் - 17

## சொத்து தொடர்பான குற்றங்கள்

வழக்கறிஞர் **தேவிபாலா குணசேகரன்,**
**M.A., M.L.,**

**பிரிவு 378 (Section 378)**

**திருட்டு - Theft**

பிறரது உடைமையில் இருந்து, அசையும் பொருள் அல்லது பொருட்களை, அவரது சம்மதமின்றி, நேர்மையற்ற வழியில் எடுத்துக் கொள்ளும் உட்கருத்துடன், அந்தப் பொருள் அல்லது பொருட்களை நகர்த்தும் செயல் திருட்டு எனப்படும். அதைச் செய்பவர் திருட்டுக் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

**விளக்கம்-1**

பூமியோடு பிணைக்கப்பட்டுள்ள பொருளை அது பூமியோடு பொருந்தியிருக்கும் வரை திருட இயலாது. அதைப் பூமியிலிருந்து பிரித்தவுடன் திருட்டுக்கு உரிய பொருள் ஆகிவிடும்.

**இரண்டாவது :** அப்படி அந்தப் பொருளைத் திருடுவதற்காகவே, பூமியிலிருந்து பிரித்தெடுக்கும் போது, திருட்டும் சேர்ந்தே நடைபெறுகிறது.

**மூன்றாவது :** ஒரு பொருளை நகர்த்தவொட்டாமல் போட்டிருக்கும் தடையினை அகற்றுவதும், அல்லது வேறொரு பொருளிலிருந்து அதைப் பிரிப்பதும், நேரடியாக அதனை நர்த்துவதும் ஆகிய அனைத்துமே ‘நகர்த்துதல்’ என்றே பொருள் கொள்ளப்படும்.

**நான்காவது** ஒரு மிருகத்தை நகரும்படிச் செய்யப்படும் எந்தக் காரியமும் ’நகர்த்துதல்’ எனவே அறியப்படும், நகர்த்தப்பட்டால் அதன் பாதுகாப்பிலிருந்த பொருளும் நகர்த்தப் பட்டதாகவே கொள்ளப்படும்.

**ஐந்தாவதாக** நகர்த்துதலுக்கான சம்மதம் என்பது, தெளிவாகத் தரப்படலாம் அல்லது பூடகமாகவும் இருக்கலாம் சொத்துக்கு உரிமையாளர் மட்டுமின்றி, அவர் சார்பில் அதிகாரம் பெற்ற வேறு யாராலும் அளிக்கப்பட்ட சம்மதமும், அத்தகைய சம்மதமாகவே கொள்ளப்படும்.

**பிரிவு 379 (Section 379)**

**குற்றம் :** திருடுதல்

**தண்டனை :** 3 ஆண்டுகள் சிறைவாசம், அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 380 (Section 380)**

**குற்றம் :** ஒரு கட்டிடம், கூடாரம் அல்லது கலம் ஒன்றிலிருந்து திருடுதல்.

**தண்டனை :** 7 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 381 (Section 381)**

**குற்றம் :** முதலாளி அல்லது வேலை தருபவரின் கைவசமுள்ள பொருளை, எழுத்தர் அல்லது பணியாள் திருடுதல்.

**தண்டனை :** 7 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 382 (Section 382)**

**குற்றம் :** திருடுவதற்கு அல்லது அதைச் செய்த பிறகு ஒதுங்கிப் போவதற்கு, அல்லது அதன் மூலம் எடுத்த பொருளைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்காக, மரணம் அல்லது காயம் அல்லது தடுத்தல் அல்லது அவை குறித்த பயத்தை விளைவிப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்த பிறகு அவ்வாறு திருடுதல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 384 (Section 384)**

**குற்றம் :** அச்சுறுத்திப் பறித்தல்.

**தண்டனை :** 3 ஆண்டுகள் சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 385 (Section 385)**

**குற்றம் :** அச்சுறுத்திப் பறிக்கும் நோக்குடன், கேடு விளையுமென்ற அச்சதத்தை உண்டாக்குதல் அல்லது உண்டாக்க முயலுதல்.

**தண்டனை :** 2 ஆண்டுகள் சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 386 (Section 386)**

**குற்றம் :** மரணம் அல்லது கொடுங்காயத்தை ஒருவருக்கு உண்டு பண்ணுவதாக அச்சுறுத்திப் பறித்தல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 387 (Section 387)**

**குற்றம் :** அச்சுறுத்திப் பறிப்பதற்காக ஒருவருக்கு மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்கும் அச்சத்தை உண்டாக்குதல் அல்லது உண்டாக்க முயற்சி செய்தல்.

**தண்டனை :** 7 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 388 (Section 388)**

**குற்றம் :** மரண அல்லது ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டு சிறைதண்டனை விதிப்பதற்குரிய குற்றத்தைச் செய்திருப்பதாகக் குற்றம் சுமத்திப் பயமுறுத்துவதன் மூலம் அச்சுறுத்திப் பறித்தல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும். சுமத்துவதாகப் பயமுறுத்தப்பட்டது இயற்கைக்கு மாறான ஒரு குற்றமாக இருக்குமானால், ஆயுள் தண்டனை.

**பிரிவு 389 (Section 389)**

**குற்றம் :** அச்சுறுத்திப் பறிக்கும் நோக்குடன், மரண அல்லது ஆயுள் அல்லது 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றத்தைச் சுமத்தப் போவதாக ஒருவருக்குப் பயத்தை உண்டாக்குதல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும். சுமத்தப்படுவதாக கூறப்படுவது, இயற்கைக்கு மாறான குற்றம் எனில், ஆயுள் தண்டனை...

**பிரிவு 390 (Section 390)**
**கொள்ளை - Robbery**

திருட்டும், அச்சுறுத்துப் பறித்தலும் இணைந்து நடைபெற்றிருக்கும் செயலே கொள்ளையடித்தல்.

**பிரிவு 391 (Section 391)**

**கூட்டுக்கொள்ளை - Dacoity**

5 அல்லது 5க்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து கொள்ளையடித்தலில் ஈடுபடுதல் கூட்டுக் கொள்ளை ஆகும்.

**பிரிவு 392 (Section 392)**

**குற்றம் :** கொள்ளையடித்தல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைவாசமும், அபராதமும்.

**குற்றம் :** சூரியன் மறைவுக்கும், உதிப்பதற்கும் இடைப்பட்ட காலத்தில் நெடுஞ்சாலையில் செய்யப்படுமானால்...

**தண்டனை :** 14 ஆண்டுகள் கடுங்காவல் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 393 (Section 393)**

**குற்றம் :** கொள்ளைக் குற்றம் செய்ய முயற்சி செய்தல்.

**தண்டனை :** 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 394 (Section 394)**

**குற்றம் :** கொள்ளையடித்தல் அல்லது கொள்ளை முயற்சியில் ஈடுபடும் போது, கொள்ளையடிக்கும் நபர்களில் ஒருவரோ, கொள்ளைச் செயலுக்கு உடந்தையான வேறொரு நபரோ தன்னிச்சையாகக் காயம் விளைவித்தல்.

**தண்டனை :** ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைவாசமும், அபராதமும்.

---

# கோவை மண்டல கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள்

## நீலகிரி கிளை

தலைவர் : **திரு. பரந்தாமன்**
CHD/ மத்திய அலுவலகம்

செயலாளர் : **திரு. M.S. முகம்மது கவுஸ்**
முகவர் I-ம் நிலை / பைக்காரா

பொருளாளர் : **திரு. பிலிம்குமார்**
மின்பாதை ஆய்வாளர்/ போயர் கூடலூர்

செயல் தலைவர் : **திரு. F. பெடரிக்ட் கிளமெண்ட்**
கணக்கீட்டு ஆய்வாளர்/ எட்டின்ஸ் ரோடு

அமைப்பு செயலாளர் : **திரு. J. அந்தோணி பிரேசில்**
கேங்மேன்/ போயர் கூடலூர்

இணை செயலாளர் : **திரு. V. நாட்ராயன்**
கேங்மேன்/ பைக்காரா

உப தலைவர் : **திரு. R. சுபாஷ்**
கேங்மேன்/ தெற்கு, கூடலூர்

மகளிர் அணி செயலாளர் : **திருமதி. K. மினிதா**
நிர்வாக மேற்பார்வையாளர்
மத்திய அலுவலகம்

## எமரால்ட் பிராஜெக்ட் கிளை

தலைவர் : **திரு. R. கிருஷ்ணன்**
உதவி செயற்பொறியாளர் / சிவில்

செயலாளர் : **திரு. P. மகாராஜன்**
கணக்கு மேற்பார்வையாளர்
மத்திய அலுவலகம்

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு

மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழுவின் கூட்டம் 16.10.2023 அன்று மாலை 3.00 மணியளவில் சிஐடியு சங்கமனையில் நடைபெற்றது. கூட்டத்தில் மின்வாரியத்தில் தேங்கியுள்ள பிரச்சனைகள் தொடர்பாகவும், காலிப்பணி இடங்களை நிரப்புதல், மின்வாரிய ஆணை எண்-2 நாள்: 12.04.2022-ஐ ரத்து செய்தல், E-Tender முறையை ரத்து செய்தல், ஊதிய உயர்வு நிலுவைத் தொகை, 01.12.2019-க்கு பிறகு இணைந்தவர்களுக்கு 6 சதம் வழங்குதல் போன்ற பல்வேறு பிரச்சனைகளை விவாதித்து கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

2023 நவம்பர் மாதம் 02-ம் தேதியன்று காலை பிரிவு அலுவலகங்களில் ஒலி முழக்க ஆர்ப்பாட்டம் நடத்துவது, அன்று மாலையே அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக மாலை 5.15 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திடுவது என்று கூட்டு நடவடிக்கை குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கோரிக்கைகள்

1. **TANGEDCO-வை மூன்றாக பிரிப்பதை கைவிடுக...**
2. **ஒப்பந்தத்திற்கு எதிராக நடைமுறைப்படுத்த முயலும் E-Tender முறையை ரத்து செய்திடுக.**
3. **மின்வாரியத்திலுள்ள ஆரம்பநிலை பணியிடங்களை நிரப்பி விபத்துக்களை தவிர்த்திடவும், நுகர்வோருக்கு சீரான மின்சாரத்தை அளித்திடவும் நடவடிக்கை எடுத்திடுக.**
4. **ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை உடனே வழங்கிடுக. 01.12.2019-க்கு பிறகு பணியில் இணைந்த ஊழியர்களுக்கு 6 சதம் ஊதிய உயர்வு வழங்கிடுக.**
5. **மின்வாரிய ஆணை எண். 2 நாள்: 12.04.2022-ஐ மின்சாரிய நிர்வாகம் ஏற்றுக்கொண்டபடி ரத்து செய்திடுக.**
6. **ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் நிலுவையில் உள்ள அலவன்ஸ்க்காக அமைக்கப்பட்ட குழு பேச்சுவார்த்தையை துவக்கிடுக.**
7. **போனஸ் பேச்சுவார்த்தையை உடனடியாக துவக்கிடுக.**

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 02.11.2023 அன்று நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட மின்சாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதிய சங்கங்களின் கூட்டுக்குழு

தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதிய சங்கங்களின் கூட்டு குழு கூட்டம் 16.10.2023 அன்று மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள மத்திய அமைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மின்வாரிய ஓய்வூதிய அமைப்புகளான

- த.நா.மின்கழக ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம்
- த.நா.மின்வாரிய ஓய்வு பெற்றோர் நலஅமைப்பு
- த.நா. மின்வாரிய ஓய்வு பெற்ற பணியாளர் மற்றும் அலுவலர் சங்கம்
- த.நா. மின்வாரிய ஓய்வூதியர் முன்னேற்ற சங்கம்
- த.நா. மின்வாரிய ஓய்வு பெற்ற பணியாளர்கள் சங்கம்
- த.நா.மின்வாரிய ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கம்
- த.நா. மின்வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம்

ஆகிய 7 அமைப்புகள் கலந்து கொண்டன. அக்கூட்டத்தில் மின்வாரிய ஓய்வூதியர்களோடு தொடர்புடைய பிரச்சனைகளான புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் அமுலாக்கம், வாரிய உத்திரவு 2 நாள்: 12.04.2022 திரும்ப பெறுதல், கார்பஸ் பண்டு அதன் பாதிப்புகள் போன்றவைகள் தொடர்பாக கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

நீண்ட கலந்துரையாடலுக்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. மருத்துவ காப்பீடு திட்டம் 2018 மற்றும் நீட்டிப்பு 2022 ஆகியவைகள் அமுலாக்கலில் உள்ள குறைகளை சரி செய்யும் வகையில் மின்வாரியம், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், மின்வாரிய ஓய்வூதிய அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்குண்டான ஏற்பாட்டை செய்ய வேண்டியும் குடும்ப பாதுகாப்பு திட்ட நிதி வழங்கலில் உள்ள காலதாமதத்தை களைய வேண்டியும் வாரிய தலைவருக்கு கடிதம் கொடுத்து வலியுறுத்துவது என்றும் சமீபத்தில் தமிழக மின்வாரியம் எடுக்கும் நடவடிக்கைகள் அதனால் ஏற்படும் பெரும் பாதிப்புகள் அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை ஓய்வூதியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் திருநெல்வேலி, மதுரை, திருச்சி, கோவை, சென்னை ஆகிய 5 மண்டலங்களில் மாநில தலைவர்கள் கலந்து கொள்ள கூடிய விழிப்புணர்வு பிரச்சார பேரவைகளை 21.11.2023 அன்று நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டன.

மண்டலங்களில் ஏற்பாடு செய்பவர்கள் மாநில தலைமையோடு கலந்து பேசி அந்தந்த மையத்தில் மாநில தலைவர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். கூட்டத்தின் அவசியத்தை உணர்ந்து கூட்டத்தை சிறப்பாக நடத்திட கூட்டமைப்பில் உள்ள அமைப்புகள் மாநில மையத்திலிருந்து தகவல் அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

# தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதிய சங்கங்களின் கூட்டுக்குழு

பெறுநர் நாள்: 20.10.2023

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்
800, அண்ணாசாலை, சென்னை-600 002.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் : *மின்வாரியம் மருத்துவ காப்பீட்டு திட்டம் 2018 மற்றும் 2022ல் நீட்டிப்பு திட்டத்தின் கீழ் மருத்துவ செலவுத் தொகையை மீள அளிப்பதில் உள்ள குறைகளை களைய பேச்சுவார்த்தை நடத்த கோருதல் - தொடர்பாக.***

மருத்துவ காப்பீட்டு திட்டம் 2018 மற்றும் நீட்டிப்பு 2022 அடிப்படையில் மருத்துவ சிகிச்சை செலவுத் தொகையை மீள அளிப்பதில் உள்ள குறைகளை களைந்து முறைப்படுத்துவது தொடர்பாக ஓய்வூதிய அமைப்புகளோடு பேச்சுவார்த்தை நடத்தி எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கும் கொண்டு வருவதோடு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மருத்துவ காப்பீடு திட்டம் 2018 அடிப்படையில் மருத்துவ சிகிச்சை பெற்று அதற்கான செலவை மீளப் பெறுவதில் 500க்கும் மேற்பட்டவர்கள் உரிய தொகையை பெறாமல் காத்து கிடக்கின்றனர். அவர்களது மருத்துவ செலவுக்கான தொகையை மீள அளிப்பதில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் போதிய அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. அதோடு மட்டுமல்ல புதிய நீட்டிப்பு உத்திரவு வந்த பின்னர் பழைய செலவு கேட்பு மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலாது எனக் கூறி கேட்பு விண்ணப்பங்களை வாரியம் நேரிடையாக கொண்டு சென்ற போது வாங்க இயலாது என மறுத்ததாகவும் அதனால் விண்ணப்பங்களை தபாலில் அனுப்பியதாகவும் தெரிய வருகிறது.

இதைப் பொறுத்த வரையில் நாங்கள் சேகரித்த விவரங்களில் ‘‘கடந்த நான்கு ஆண்டுகளில் ஊழியர்கள் அளித்த தொகை ரூ. 151 கோடி யுனைடெட் இந்தியா மீளத் தொகையாக அளித்தது 115 கோடி ஊழியர்கள் அளித்த தொகையில் 36 கோடி மீதம் இருந்த போதிலும் மீதம் உள்ள விண்ணப்பங்களுக்கு மீளத் தொகை அளிக்க இயலாது எனக் கூறுவது சரியல்ல.

2022ல் மருத்துவ காப்பீட்டு திட்டத்தை நீட்டித்து அமுல்படுத்தும் போதும் பழைய குழப்பங்கள் தொடர்கின்றன. தேவையான விவரங்களோடு அடையாள அட்டை வழங்கப்படவில்லை. கேட்பு விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து மீளத் தொகை வழங்குவதில் வீணான காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. சிகிச்சைக்கு மருத்துவமனை நிர்ணயிக்கும் தொகையை அளிக்காமல், அதில் 30 சதவீதமே பேக்கேஜ் டீல் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. இது வாரிய உத்திரவில் சொல்லப்பட்ட நான்கு வருட இடைவெளியில் 5 லட்சம் ரூபாய் வரையில் சிகிச்சை பெறலாம் என்ற உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் அமையவில்லை. இதனால் ஓய்வூதியர்கள் மத்தியில் ஏமாற்றமும் குழப்ப நிலையும் நீடிக்கின்றது.

அடுத்து கேட்பு விண்ணப்பங்களை பரிசீலித்து யுனைடெட் இந்தியா நிறுவனத்திற்கு பரிந்துரைக்க அமைக்கப்பட்ட குழுவால் 700க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை பரிந்துரைக்க இயலாது என முடிவு செய்தன. இந்த விண்ணப்பங்களோடு மருத்துவ காப்பீட்டு திட்ட

விதிகளுக்கு உட்படாத 800க்கு மேற்பட்ட விண்ணப்பங்களும் சேர்ந்து சுமார் 1500 விண்ணப்பங்களுக்கு அடிப்படையில் மீள் தொகை வழங்கலாம் என முடிவு செய்து வாரிய கூட்டத்திற்கு கொண்டு சென்று முடிவு எடுக்காமல் தள்ளிப் போடுவதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து இனி வரும் வாரிய கூட்டத்தில் சாதகமான முடிவு எடுத்து செலவு தொகையை மீள அளித்திட வேண்டும் என்று வேண்டுகிறோம்.

எனவே, வாரியத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் அவர்கள் எங்கள் கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து மருத்துவ காப்பீடு திட்டம் 2018ன்படி மீள் தொகை கேட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கு மீளத் தொகையை உடனடியாக வழங்குதல்.

★ காப்பீடு திட்டம் 2022 அமுலாக்கலில் உள்ள குறைகள், பேக்கேஜ் டீல் போன்றவைகளை திரும்ப பெறுதல்.

★ மருத்துவ உதவி விதி (Medical Assistance Rule) அடிப்படையில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கு மீளத் தொகை அளித்தல்.

★ இவைகளின் மீது வாரியமும், யுனைடெட் இந்தியா நிறுவனமும் ஓய்வூதிய அமைப்புகளோடு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

★ இவை தவிர மின்வாரிய ஓய்வூதியர் இறக்க நேரிட்டால் வழங்கும். குடும்ப பாதுகாப்பு நிதி வழங்குவதில் ஏற்படும் வீணான காலதாமதத்தை தவிர்த்திட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

## EB காரன்

உருகுள்ள திருவிழா
சொந்தபந்தம் கூடிட்டாங்க
இவன் மட்டும் பாவமா
நிக்கிறானே காட்டுக்குள்ளே
பிரேக் டவுன் பணியிலே
அவன்தான் EBகாரன்

புயலும் வந்துடுச்சு
மழையும் பெய்யுதுங்க
வீதியிலே யாரும் இல்லை
எல்லோரும் வீட்டுக்குள்ளே
இவன் மட்டும் வீரமா
உழைக்கிறான் பாருங்க
அவன்தான் EBகாரன்

எங்க வீட்டில் காரன்டில்ல
போன் மட்டும் செஞ்சிடுங்க
பய புள்ள தூங்கமாட்டா
வந்து நிப்பான் பாருங்க
ரொம்பவும் பாவங்க
அவன்தான் EBகாரன்

மூணு வேளை சோறு போட்டு
சாப்பிட்டே தூங்குறாங்க
ஒருவேளை சோறு கூட
நிம்மதியா திண்ணத்திலே
இவன் பசியாறலையே
அவன் தான் EBகாரன்

எட்டு மணி நேரந்தான்
வேலையுன்னு சொல்றாங்க
சட்டம் கூட சொல்லுதுங்க
இராபகலா உழைக்கிறான்
நேரம் காலம் இல்லேங்க
அவன் தான் EBகாரன்

கொரோனா காலத்திலே
வீட்டிலேயே முடங்கலே
களத்திலே வந்துநின்னா
கரண்டும் தந்தானே
கஷ்டப்பட்டு நின்னானே
அவன் தான் EBகாரன்

தடையில்லா மின்சாரம்
தந்திடுவான் பாருங்க
உசிரையும் நினைக்கிலே
குடும்பத்தை நினைக்கலே
கரண்ட்டு தான் உசுருங்க
அவன் தான் EBகாரன்

தூங்கியது போதுங்க
முழுச்சுதா பாருங்க
நமக்கும் வீரம் உண்டு
தீரம் மிக்க நெஞ்சம் உண்டு
போராடியே வெல்வோமே
நம் உரிமை காப்போமே

தோழமையுடன்
**ஆர். சிவபிரகாஷ்** BE
பொருளாளர்
கோவை வடக்கு கிளை

## மின்கணக்கீடு - கைபேசி பயன்படுத்தும் புதிய முறை - உத்தரவு

**TANGEDCO (ACCOUNTS BRANCH)**

From
**The Chief Financial Controller/Revenue**
7th Floor, NPKRR Maaligai,
144, Anna Salai, Chennai-600 002.

To
**All the Superintending Engineer,**
EDCs,
TANGEDCO

**Lr. No. CFC/Rev/FC/Rev.DFC/Rev/AAO/JA/F.Rev Aug/D.770/2023, dt. 13.10.2023**

***Sub :*** Android Mobile app for Automatic Meter Reading and Assessment -Already implemented for LTCT Assessment from the month 08/2023- Roll out of mobile app for Non-CT service assessments in ten sections in each circle - Instruction Communicated - Regarding.

***Reg :*** Lr.No. CENT&RADRP/SE/IT2/EE/LT/AEE/LTI/F.Mob.App/D.No. 602/23, Dt. 14.08.2023.

*****

In the reference cited above, it has been instructed to take automatic reading in respect of LTCT services from the meters purchased on or after 2009 and manual reading may be entered for the old non-DLMS meters purchased before 2009.

2.0) Now, the CMD/TANGEDCO has instructed to rollout the mobile app for Non-CT services assessment in ten sections in each circle based on the availability of the optical cable/Bluetooth transmitter.

3.0) In this connection, it is to be informed that Automatic reading is supported in the following meters for non-CT.

1. All make of DLMS Meters.
2. Non-DLMS meters of HPL, Genus, L&T, AVON & 3232Capital make.

3.1) The remaining Non-DLMS meters are not integrated in the mobile app and hence manual entry may be made through the mobile app. The mobile application apk file along with the document will be shared to respective Managers / Senior Managers through E-mail. Any technical issues faced during implementation may be reported to HQ IT wing immediately for rectification.

4.0) Hence, the Superintending Engineer EDCs are requested to instruct the officials concerned to make assessment of Non-CT services in ten sections of each circle from 18.10.2023 subject to the availability of the optical cables in the sections.

//By order of CMD/TG//

Chief Financial Controller/Revenue

## விருப்ப மாறுதல் விண்ணப்பம் - உத்தரவு வழங்குவதற்கான உத்தரவு

**(ABSTRACT)**

Establishment - TANGEDCO - RWE - Request Transfer Application applied via online during Janurary / July - Delegation of powers from Chief Engineer/Personnel to Chief Engineer concerned - Orders - Issued.

---

**Administrative Branch**

**(Per) CMD TANGEDCO Proceeding No. 102** **Dated 18th October 2023**
Iyppasi-1, Sobakridhu Varudam,
Thiruvalluavar Aandu-2054.

**Read:**

1) Memo No. 69140/IR1(3)/96-1 (Adm.Br.) dated 11.06.1996.

2) (Rt.) CMD/TANGEDCO Proceedings No. 5, (Adm. Br.) dated 28.06.2017.

*****

**PROCEEDINGS:**

Instructions and guidelines have been issued from time to time with regard to request transfers/ The existing Request Transfer guidelines for Class II to IV framed and implemented vide orders read 1st above have been followed for several years. During the year 2017, a committed was constituted to make necessary modifications and submit fresh consolidated Request Transfer Guidelines. Accordingly, Request Transfer Guidelines were issued afresh vide orders read 2nd above.

2) The Request Transfer Applications are received twice a year so that the officers/staff from Class II to IV can seek transfer to another Circle/Region. The Class II officials and Class III employees come under State seniority. However, in the case of Regular Work Establishment (RWE) employees, Circle seniority is maintained.

3) The seniority updation of RWE employees are not communicated to Head Quarters in time and hence processing the application could not be performed in time. Promotion of RWE employees is handled in concerned Circles. Operating of promotions of RWE employees at Circle and operating online Request. Transfer Applications at Administrative Branch creates

clash of orders. Sometimes the places to which RTA orders are issued by the Chief Engineer/ Personnel are filled up before hand by the Superintending Engineer concerned by way of promotional orders.

4) Several unions have also raised objections in processing Request Transfer Application of RWE employees by the Chief Engineer/Personnel, since accommodating employees from other circles to existing circle, compress the promotional opportunities/seniority of RWE employees working in the some cirlce for several years.

5) Regarding delegation of powers in the matter of Regular Work Establishment transfers instructions have been specified in Annexure-SI.No. IV. Due to several practical difficulties encountered during implementation of Request Transfer Application applied by Regular Work Establishment employee foregoing seniority via online during January/July/ the matter has been deliberately examined in detail.

6) Accordingly, the delegation of powers in effecting Request Transfer Application applied by Regular Work Establishment employee foregoing seniority via online is hereby modified as shown below:-

| SI. No | Method of Request Transfer Application | Existing Powers of Delegation | Power now delegated to |
|---|---|---|---|
| a) | RTA applied by RWE employee foregoing seniority via online during January/July within Region | Chief Engineer/ Personnel | Chief Engineer concerned |
| b) | RTA applied by RWE employee foregoing seniority via online during January/July outside Region | Chief Engineer/ Personnel | Chief Engineer concerned to where transfer requested with consent of the Chief Engineer controlling the parental Circle. |

7) This order shall be implemented with immediate effect.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**K. MOZHIARASI**
Chief Engineer/Personnel

**தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழுவின் முடிவின்படி 02.11.2023 அன்று கோரிக்கைகளை வலியுறுத்தி காலையில் பிரிவு அலுவலகங்களிலும், மாலையில் மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில்களிலும் கோரிக்கை முழக்கமிட்டு போராட்டத்தை வெற்றி பெற செய்த அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.** *- ஆசிரியர்*